<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பாலக்கோடு</u>

முன்னிலை திரு.எஸ்.சந்தானகிருஷ்ணசாமி, பி.ஏ.,பி.எல்.,
நீதித்துறை நடுவர், பாலக்கோடு

2017ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 17ம் நாள் சனிக்கிழமை

D.V.No.1/2016

மாரியம்மாள் ....... மனுதாரர்

-எதிராக-

1. பாண்டியன்
2. விஜியா ........ எதிர்மனுதாரர்கள்

இம்மனு 23.07.2010ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.மாதவன், பி.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. L.வேல்முருகன் பி.ஏ.,பி.எல்., திரு. R.ரஞ்சித்குமார் பி.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதங்கள், வழக்காவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

WEB COPY

**உத்தரவு**

மனுதாரருக்கு எதிர்மனுதாரர்கள் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் பிரிவு 18-ன் கீழ் பாதுகாப்பு கட்டளை, பிரிவு 19-ன் கீழ் வசிப்பிட கட்டளை, பிரிவு 20-ன் கீழ் பண உதவி கட்டளை, பிரிவு 22-ன் கீழ் இழப்பீட்டு கட்டளை வழங்க கேட்டு மேற்படி சட்டத்தின் பிரிவு 12-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## <u>1. மனுவின் சுருக்கம்</u>

மனுதாரரும், 1ம் எதிர்மனுதாரருக்குமிடையே 14.06.1989ம் தேதி திருமணம் நடைபெற்று தற்போது வரை அமுலிலிருந்து வருகிறது. 2 எதிர்மனுதாரர் மனுதாரரின் மாமியார் ஆவார். மனுதாரருக்கு 1ம் எதிர்மனுதாரர் மூலம் குழந்தை இல்லாததால் அதை குற்றம்சாட்டி 2ம் எதிர்மனுதாரர் அடித்து சித்திரவதை செய்து சீதனமாக கொடுத்த 10 பவுன் நகையை பிடிங்கி தனக்கு

வைத்திய செலவு செய்ததாக கூறி நகைகளை அடகு வைத்து சண்டை செய்து வீட்டைவிட்டு துரத்திவிட்டதாகவும் 1ம் எதிர்மனுதாரருக்கு வேறு பெண்ணுடன் தொடர்பு இருப்பதை கேட்டபோது குழந்தை இல்லாததால் 2ம் திருமணம் செய்துகொள்வதாக கூறியதாகவும், எதிர்மனுதாரர்கள் அடிக்கடி சண்டை செய்து துரத்திவிட்டு அந்த பெண்ணை திருமணம் செய்துகொண்டதாகவும் மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தபின்பும் 10 பவுன் நகையை கொடுக்கவில்லை என்றும், எனவே ஜீவனத்தொகை மற்றும் கணவர் வீட்டில் குடியிருக்க பாதுகாப்பு கேட்டு மனுதாரர் 02.03.2010ம் தேதியன்று தருமபுரி சமூகநலத்துறையில் புகார் மனு கொடுத்துள்ளார். அதன்பேரில் எதிர்மனுதாரர்களை அழைத்து விசாரித்தபோது அவர் நீதிமன்றத்தின் மூலம் தீர்வு காண விரும்புவதாக கூறியதால் விசாரணை மேற்கொண்டு குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் 2005 பிரிவு 18-ன் கீழ் பாதுகாப்பு கட்டளை கேட்டும், பிரிவு 19-ன் கீழ் எதிர்மனுதாரரின் வீட்டில் உறைவிட கட்டளை கேட்டும், பிரிவு 20-ன் கீழ் 10 பவுன் நகைக்கு இழப்பீடாக ரூ.1.20 ஆயிரமும், உணவு, உடை, மருத்துவம், வீட்டு செலவு மற்றும் இதர செலவுகளுக்கு மாதம் ரூ.15 ஆயிரம் கேட்டும், பிரிவு 22ன் கீழ் ரூ.2 லட்சம் இழப்பீடு கேட்டும் விசாரணை அறிக்கை மற்றும் படிவம் 1, 2, 3டன் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தருமபுரி மாவட்ட பாதுகாப்பு அலுவலர் மனுதாரர் சார்பாக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. **<u>1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்து 2ம் எதிர்மனுதாரர் ஏற்றுக்கொண்ட எதிருரையின் சுருக்கம்</u>**

எதிர்மனுதாரருக்கும் மனுதாரருக்கும் 14.06.1989ம் தேதியில் எதிர்மனுதாரருடைய செலவில் திருமணம் நடைபெற்றது. எதிர்மனுதாரருக்கும் மனுதாரருக்கும் குழந்தை பிறக்கவில்லை. மனுதாரருக்கு குழந்தை பிறக்காததால் அந்த குறையை சுட்டிக்காட்டி எதிர்மனுதாரரின் தாயார் அடித்து சித்தரவதை செய்தார் என்றும், மனுதாரரின் பெற்றோர் சீர்வரிசை 10 பவுன் நகை மற்றும் வீட்டு உபயோக பொருட்களை வைத்துக்கொண்டு எதிர்மனுதாரர் வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பு வைத்து கொண்டார் என்று கேசுக்காக ஜோடனை செய்துள்ளார். மனுதாரரின் தகப்பனார் உயிருடன் இருக்கும் வரை எதிர்மனுதாரருடன் மனுதாரர் நல்லமுறையில் வாழ்க்கை நடத்தி வந்துள்ளார். மனுதாரரின் தகப்பனார் இறந்த பிறகு மனுதாரரின் தயார் சகோதாரர் பேச்சைக் கேட்டுக்கொண்டு எதிர்மனுதாரருக்கு

WEB COPY

மனஸ்தாபம் மனகஷ்டம் ஏற்பட்டு 2001 வருடம் பஞ்சாயத்து பேசப்பட்டுள்ளது. மனுதாரர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எதிர்மனுதாரர் பேரில் புகார் செய்துள்ளார். எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழ தயாராக இருப்பதாகவும், மனுதாரரை தன்னிடம் அனுப்பி வைக்கும்படி கேட்டுகொண்டார். மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லை என கூறிவிட்டார். இந்நிலையில் எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழ வாய்ப்பில்லாததால் எதிர்மனுதாரர் கனம் தருமபுரி சார்பு நீதிமன்றத்தில் எம்.ஓ.பி.3/2010 என்ற விவாகரத்து கோரி வழக்கு தொடர்ந்து மனு நிலுவையில் இருந்து வருகிறது. மனுதாரருக்கு நிகழ்கால, எதிர்கால ஜீவனத்திற்காக ரூ.1,25,000/-ம் கொடுக்கும்படி சமரசம் ஆகியுள்ளது. எதிர்மனுதாரர் ரூ.25,000/-ஐ கொடுத்துள்ளார். மீதி தொகையை செலுத்த தயாராக உள்ளார். மனுதாரருக்கு தன் தாய் வீட்டில் நிலம் வீடு கொடுத்துள்ளனர். அதிலிருந்தே மனுதாரருக்கு நிறை வருமானம் வருகிறது. மனுதாரர் தன்னை பராமரித்துக்கொள்ள போதிய வசதியுள்ளது. எதிர்மனுதாரருக்கு நிலம், வீடு எதுவுமில்லை. கூலி வேலை செய்து கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார். மனுதாரருக்கு ஜீவனாசம் கொடுக்கும் சக்தியும், வசதியும் எதிர்மனுதாரருக்கு இல்லை. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

WEB COPY

3. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் என்னவெனில் மனு பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கக் கூடியதா? இல்லையா? என்பதேயாகும்.

4. மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆகவும், தனிநபர் ம.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1, 2 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் 1ம் எதிர்மனுதாரர் எ.ம.சா.1 ஆகவும், தருமபுரி அனைத்து மகளிர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் எ.ம.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு எ.ம.சா.ஆ.1, 2 சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**தீர்வு -**

5. மனுதாரருக்கும், 1ம் எதிர்மனுதாரருக்குமிடையே 14.06.1989ம் தேதி திருமணம் நடைபெற்று தற்போது வரை அமுலிலிருந்து வருகிறது என்பதும் மனுதாரருக்கு குழந்தை இல்லை என்பதும் 2ம் எதிர்மனுதாரர், மனுதாரரின் மாமியார் என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளாகும். குழந்தை இல்லாததால் அதை குற்றம்சாட்டி 2ம் எதிர்மனுதாரர் மனுதாரரை அடித்து

சித்திரவதை செய்து சீதனமாக கொடுத்த 10 பவுன் நகையை பிடிங்கி தனக்கு வைத்திய செலவு செய்ததாக கூறி அடகு வைத்து சண்டை செய்து வீட்டைவிட்டு துரத்திவிட்டதாகவும் 1ம் எதிர்மனுதாரருக்கு வேறு பெண்ணுடன் தொடர்பு இருப்பதை கேட்டபோது குழந்தை இல்லாததால் 2ம் திருமணம் செய்துகொள்வதாக கூறியதாகவும், எதிர்மனுதாரர்கள் அடிக்கடி சண்டை செய்து மனுதாரரை துரத்திவிட்டு அந்த பெண்ணை திருமணம் செய்துகொண்டதாகவும் மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளது. இந்த மனு தாக்கல் செய்வதற்கு முன்பாக மனுதாரர் தருமபுரி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 17.11.2009ம் தேதி புகார் கொடுத்துள்ளார். இதை 1ம் எதிர்மனுதாரர் விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார். புகார் கொடுத்ததற்கு காவல் நிலையத்தில் வழங்கப்பட்ட சி.எஸ்.ஆர். நகல் ம.சா.ஆ.2ல் நகைகளை பெற்று தரவேண்டி புகார் கொடுக்கப்பட்டதாக குறிப்பு கண்டுள்ளது. இதை மனுதாரர் மறுக்கவில்லை. மேற்படி புகாரை தவிர எதிர்மனுதாரர்கள் மீது வேறு புகார் எதுவும் காவல் நிலையத்தில் கொடுத்ததாக சாட்சியமில்லை. 17.11.2009ம் தேதிய புகாரின் பேரில் 1ம் எதிர்மனுதாரர் அழைத்து விசாரிக்கப்பட்டு ஜீவனாம்சமாக மனுதாரருக்கு ரூ.1.25 லட்சம் கொடுத்துவிடுவதாக பேசி முடிக்கப்பட்டு 18.11.2011ம் தேதி ரூ.25 ஆயிரம் கொடுக்கப்பட்டது என்பதை மனுதாரரும், 1ம் எதிர்மனுதாரரும் விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார்கள். மேற்படி விபரத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் எழுதிக்கொடுத்த ஆவணம் எ.ம.சா.ஆ.1 ஆகவும், காவல் நிலையத்தில் மேற்படி மனுவின் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டது என்பதற்கு நிலையத்தில் பராமரித்து வரும் பதிவேட்டின் நகல் எ.ம.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எ.ம.சா.ஆ.2ல், மனுதாரருக்கு குழந்தையில்லாததால் 1ம் எதிர்மனுதாரர் 2வது திருமணம் செய்துகொண்டதாகவும், ஜீவனாம்சமாக மனுதாரருக்கு 1ம் எதிர்மனுதாரர் ரூ.1.25 லட்சம் கொடுத்துவிடுவதாக பேசி ரூ.25 ஆயிரத்தை கொடுத்துவிட்டதாகவும் எஞ்சிய தொகையை 03.12.2009ம் தேதிக்குள் கொடுத்துவிடுவதாக பேசி முடிக்கப்பட்டு மனு முடித்துவைக்கப்பட்டதாக குறிப்பு எழுதப்பட்டுள்ளது. ஆனால் எ.ம.சா.ஆ.1 ஆவணத்தில் நகையை பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. 10 பவுன் நகை எதிர்மனுதாரர்களிடம் உள்ளதாக சொல்வதை எதிர்மனுதாரர்கள் மறுத்து ஜீவனாம்சத்திற்காக மட்டும் மேற்படி தொகை பேசி முடிக்கப்பட்டதாக எதிர்வாதம் செய்துள்ளார்கள்.

6. மனுதாரர் ம.சா.1ஆக விசாரிக்கப்பட்டதின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். திருமணத்தின் போது மனுதாரருக்கு 10 பவுன் நகைகள் மனுதாரரின் பெற்றோர் கொடுத்ததாக தெரிவிக்கப்படுவதற்கு ஆதரவாக நகை வாங்கியதற்கான ரசீது தாக்கல் செய்யவில்லை. ம.சா.2 ஆக

WEB COPY

விசாரிக்கப்பட்ட சாட்சியும் மனுதாரருக்கு 10 பவுன் நகை சீர்வரிசையாக கொடுக்கப்பட்டது என்பதாக சாட்சியம் வழங்கவில்லை. அடித்து துன்புறுத்தியது குறித்து மனுதாரர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவே ம.சா.2 கூறியுள்ளார். ஆனால் அவ்வாறான புகார் எதுவும் கொடுத்ததாக மனுதாரர் தரப்பில் கூறவில்லை. அதற்கான ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை. மேலும் நகையை மனுதாரரின் வைத்திய செலவிற்காக அடகு வைத்துள்ளதாக எதிர்மனுதாரர்கள் கூறியதாக மனுதாரர் கூறியுள்ளார். எங்கு, எப்போது யாரிடம் அடகு வைக்கப்பட்டது என்பதை பற்றி குறிப்பிடவில்லை. மனுதாரர் 10 பவுன் நகை போட்டுவந்ததாக நிரூபிக்கபடாத நிலையில் நகையை பொருத்து மனுதாரர் கேட்டுள்ள பரிகாரம் வழங்க இயலாது.

7. மனுதாரருக்கு குழந்தை இல்லை என்பதற்காகவும், நகை, பணம் கேட்டும் எதிர்மனுதாரர்கள் மனுதாரரை எப்போது, எங்கு வைத்து எந்த வகையில் கொடுமை செய்தார்கள் என்பதை பற்றி மனு மற்றும் சாட்சியத்தின் எந்த இடத்திலும் மனுதாரர் கூறவில்லை. ம.சா.2ம் எதிர்மனுதாரர்கள் மனுதாரரை எப்போது கொடுமை செய்தார்கள் என்பதை பற்றி கூறவில்லை. பொதுப்படையாக கொடுமை செய்ததாக கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. எங்கு வசிக்கும்போது எந்த காலகட்டத்தில் என்ன மாதிரியான கொடுமைகள் செய்தார்கள் என்பதை தெளிவாக கூறி நிரூபிக்க வேண்டியது அவசியமானதாகும். ஆனால் இந்த வழக்கில் மனுதாரர் தரப்பில் அந்த சங்கதிகள் தெளிவாக கூறப்படவுமில்லை, நிரூபிக்கபடவுமில்லை. மனுதாரரும், 1ம் எதிர்மனுதாரரும் எப்போது பிரிந்தார்கள் என்பதை கூட மனுதாரர் தரப்பில் தெளிவு செய்யப்படவில்லை. கடந்த 12 வருடமாக பிரிந்து வாழ்ந்து வருவதாக 10.05.2013ம் தேதி தாக்கல் செய்த எதிருரையில் 1ம் எதிர்மனுதாரர் கூறியுள்ளார். மேலும் 23.05.2016ம் தேதிய குறுக்கு விசாரணையிலும், கடந்த 15 வருடத்திற்கு மேலாக பிரிந்து வாழ்ந்து வருவதாக கூறியுள்ளார். இந்த சங்கதியை மனுதாரர் தரப்பில் மறுக்கவில்லை. இதன்மூலம் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக இருவரும் பிரிந்து வாழ்ந்து வருவதாக தெரிகிறது. 17.11.2009ம் தேதிக்கு முன்பு எதிர்மனுதாரர்களுக்கு எதிராக காவல் துறை அல்லது நீதிமன்றத்தின் மூலம் வேறு சட்ட நடவடிக்கை எதுவும் எடுத்ததாக மனுதாரர் தரப்பில் கூறவில்லை. இம்மனு நடவடிக்கைக்கு பல வருடங்களுக்கு முன்பிருந்து இருவரும் பிரிந்து வாழ்ந்து வரும் நிலையில் நகை மற்றும் பணம் கேட்டு கொடுமை செய்ததாக கூறுவது நம்பும்விதமாக இல்லை. எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு கொடுமை செய்ததாக ம.சா.2 சாட்சியம் வழங்கியுள்ளார். ஆனால் இந்த சங்கதி அவருக்கு எவ்வாறு தெரியும் என்பதை பற்றி கூறவில்லை. மேலும் ம.சா.2 பாலக்கோட்டில் வசித்து வருகிறார். மனுதாரர் 1ம் எதிர்மனுதாரருடன்

WEB COPY

தருமபுரியில் வசித்துள்ளார். எதிர்மனுதாரர்கள் கொடுமை செய்ததாக பாலக்கோட்டில் வசிக்கும் ம.சா.2 சொல்வது நம்புமவிதமாக இல்லை. எனவே பணம் நகை கேட்டு எதிர்மனுதாரர்கள் மனுதாரரை கொடுமை செய்ததாக சொல்வது நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்யப்படுகிறது.

8. மனுதாரருக்கு குழந்தை இல்லாததால் 1ம் எதிர்மனுதாரர் சாலா (எ) லட்சுமியை 2வது திருமணம் செய்து அவர் மூலம் இரண்டு பெண் குழந்தைகள் பிறந்துள்ளதாக மனுதாரர் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது. இது பற்றிய தெளிவான விபரங்கள் மனுவிலும், சாட்சியத்திலும் மனுதாரர் கூறவில்லை. காவல் நிலையத்தில் 1ம் எதிர்மனுதாரர் எழுதிக்கொடுத்த எ.ம.சா.ஆ.1 ஆவணத்தில், இந்த மனுதாரரை தனது முதல் மனைவி என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் எ.ம.சா.ஆ.2 ஆவணத்தில் 1ம் எதிர்மனுதாரர் 2வது திருமணம் செய்து கொண்டதாக சொல்லப்பட்டுள்ளது. ஆனால் 2வது திருமணம் செய்து 2 குழந்தைகள் உள்ளதாக சொல்வதை 1ம் எதிர்மனுதாரர் சாட்சியத்தில் குறிப்பிட்டு மறுத்துள்ளார். 2வது திருமணம் செய்து கொண்டதாக மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரின் மீது வேறு சட்ட நடவடிக்கை எதுவும் எடுத்ததாக தெரியவில்லை. 2வது திருமணம் செய்து கொண்டதாக சொல்வதை நிரூபிக்க வேறு தனிபட்ட வாய்மொழி அல்லது ஆவண சாட்சியங்கள் முன்னிலையப்படுத்தவில்லை. எனவே 1ம் எதிர்மனுதாரர் 2வது திருமணம் செய்து கொண்டதாக சொல்வது நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்யப்படுகிறது.

WEB COPY

9. கடந்த 15 வருடங்களுக்கு மேலாக 1ம் எதிர்மனுதாரர் மனுதாரரை பிரிந்து வாழ்ந்து வருகிறார். விவாகரத்து கேட்டு 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்திருந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்பதை 1ம் எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்டுள்ளார். ஏன் என்ன காரணத்திற்காக இருவரும் பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள் என்பதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான காரணங்களை இருதரப்பிலும் கூறவில்லை. அதேபோல் சேர்ந்து வாழ்வதற்கும் உபய தரப்பிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அறிய முடியவில்லை. எதிர்மனுதாரர்கள் நகை, பணம் கேட்டு கொடுமை செய்ததாக சொல்வது நிருபிக்கவில்லை என்றாலும் மனுதாரரை 1ம் எதிர்மனுதாரர் காரணமின்றி புறக்கணித்து வாழ்ந்துவருவதே பெண்ணுக்கெதிரான குடும்ப வன்முறையாகும். மனுதாரரை புறக்கணித்து வாழ்ந்து வருகிறார். மனுதாரர் தற்போது அவரது சகோதரர் வீட்டில் அவரை சார்ந்து வாழ்ந்து வருகிறார். மனைவியான மனுதாரருக்கு தேவையான அத்தியாவசியமான பராமரிப்பு தொகைகளை கணவரான 1ம் எதிர்மனுதாரர் வழங்க வேண்டியது அவரது சட்டப்படியான கடமையாகும். இதுவரை மனுதாரருக்கு 1ம் எதிர்மனுதாரர் பராமரிப்பு தொகை எதுவும் வழங்காமல் இருந்துவருகிறார். 1ம்

எதிர்மனுதாரரும் சாட்சியத்தில், தான் மனுதாரருக்கு தேவையான பராமரிப்பு தொகைகளை வழங்க கடமைப்பட்டவர் என்பதையும், நீதிமன்றம் பிறப்பிக்கும் உத்திரவிற்கு கட்டுப்படுவதாகவும் கூறியுள்ளார்.

10. மனுதாரர் மனுவில் பல பரிகாரங்கள் மற்றும் பராமரிப்பு தொகையாக மாதம் ரூ.15 ஆயிரம் வேண்டுமென கேட்டிருந்தாலும் சாட்சிய விசாரணையில் பராமரிப்பு தொகையாக மாதம் ரூ.3 ஆயிரம் மற்றும் 10 பவுன் நகையை ஒப்படைக்க உத்திரவு பிறப்பிக்க வேண்டுமென மட்டும் கேட்டுள்ளார். இதர பரிகாரங்களை சாட்சியத்தில் மனுதாரர் வலியுறுத்தவில்லை. 10 பவுன் நகை மனுதாரர் போட்டு வந்தார் என்பதும் அவை எதிர்மனுதாரர்களிடம் உள்ளது என்பதும் நிரூபிக்கப்படவில்லை என்பதால் நகையை பொருத்த பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்ககூடியதல்ல. பராமரிப்பிற்கு மாதம் ரூ.15 ஆயிரம் வேண்டுமென மனுவில் கூறியிருந்தாலும் சாட்சியத்தில், ரூ.3 ஆயிரத்தை மட்டுமே மனுதாரர் வலியுறுத்தியுள்ளார். எதிர்மனுதாரர் போட்டோ கடை மற்றும் பைனான்ஸ் செய்து வருடம் ரூ.10 லட்சம் சம்பாதித்து வருவதாக மனுதாரர் தரப்பில் கூறியுள்ளதற்கு ஆதரவாக சாட்சியம் எதுவும் முன்னிலைப்படுத்தவில்லை. இருந்தபோதும் சாதாரணமாக ஒரு ஆண் மகன் மாதம் ரூ.10 ஆயிரத்திற்கு குறைவில்லாமல் சம்பாதிக்க வாய்ப்புள்ளது. மனுதாரர் தற்போது எதிர்மனுதாரர்களுடன் வசிக்காமல் மனுதாரரின் சகோதரர் வீட்டில் இருந்து வருகிறார். உணவு, உடை, இருப்பிடம் மற்றும் மருத்துவ செலவிற்கு மனுதாரருக்கு பொருளுதவி நிச்சயம் தேவைப்படும். 1ம் எதிர்மனுதாரர் அவரது சட்டப்படியான கடமையை செய்ய தவறியுள்ளார். மாதம் ரூ.3 ஆயிரம் என்பது நியாயமான மற்றும் 1ம் எதிர்மனுதாரரால் கொடுக்கக்கூடிய அளவில் இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. இந்த தொகையை இம்மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து கணக்கிட்டு 1ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு வழங்க வேண்டும்.

முடிவாக மனு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. 1ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு பராமரிப்பு தொகையாக மாதம் ரூ.3 ஆயிரம் வீதம் மனுதாக்கல் செய்த தேதியிலிருந்து கணக்கிட்டு ஒவ்வொரு ஆங்கில மாதம் 5ம் தேதிக்குள் பணமாகவோ, வங்கி கணக்கு மூலமாகவோ, காசோலை அல்லது வரைவோலை மூலமாகவோ வழங்க வேண்டுமெனவும் மனுவின் இதர பரிகாரங்கள் மற்றும் 2ம் எதிர்மனுதாரரை பொருத்து மனுவை தள்ளுபடி செய்தும் உத்திரவிடப்படுகிறது.

2017ம் ஆண்டு ஜுன் திங்கள் 17ம் நாள் இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினி மூலம்

WEB COPY

தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பாலக்கோடு.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி :</u>**

ம.சா.1 - மாரியம்மாள்
ம.சா.2 - லில்லி

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :</u>**

ம.சா.ஆ.1 - 10.03.2010ம் தேதியில் சமூக நலத்துறையில் 1ம் எதிர்மனுதாரர் எழுதிக்கொடுத்த கடித நகல்.
ம.சா.ஆ.2 - புகார் மனு ஏற்பு சான்றிதழ்

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி</u>**

எ.ம.சா.1 - பாண்டியன்
எ.ம.சா.2 - சரோஜா (காவல் ஆய்வாளர்)

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :</u>**

எ.ம.சா.ஆ.1 - பாண்டியனின் வாக்குமூலம் (நகல்)
எ.ம.சா.ஆ.2 - காவல் நிலைய பதிவேடு(சான்று நகல்)

நீதித்துறை நடுவர்,
பாலக்கோடு.

WEB COPY